(முற்பகல் 10.30)

(5) இரங்கல் தீர்மானங்கள்.

(அ) முன்னாள் தற்காலிக ஆளுநர் திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாமன்றத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு, ஆந்திரா, முதலிய மாநிலங்களின் உயர் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவும், தமிழ்நாட்டின் முன்னாள் தற்காலிக ஆளுநராகவும் பணியாற்றிய திரு. பி. சந்திரா ரெட்டி அவர்கள் 7—10—1976 ஆம் தேதி யன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

(ஆ) முன்னாள் மேலவைத் தலைவர் திரு. எம். இரத்தினசாமி, அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாமன்றத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"1921 ஆம் ஆண்டிலிருந்து 1926 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகவும், 1925-26 ஆம் ஆண்டில் அதன் தலைவராகவும், பின்பு 1962 ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரை இராஜ்ய சபை உறுப்பினராகவும் இருந்த திரு. எம். இரத்தினசாமி அவர்கள் 1—6—1977 ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும் இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது."

மாமன்றத் தலைவர் அவர்களே, திரு. சந்திரா ரெட்டி அவர்களைப் பற்றி இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு அதிகம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. பெருமதிப்பிற்குரிய திரு. சந்திரா ரெட்டி அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வைஸ் சான்சலராகவும், அதற்குப் பிறகு, நீங்கள்